மு/சிறிசுப்பிரமணியவித்தியாசாலை
புதுக்குடியிருப்பு



தரம் 3

தமிழ் - அடைமொழிகள்

21.07.2021





திருமதி.கு.விஜயராஜா

www.ireduk.lk

அடைமொழிகள்

வாக்கிய உறுப்புக்களை விளக்கியும் விரித்தும் எழுதுவதற்குப் பயன்படுத்துவதே அடைமொழிகள் ஆகும்.

www.tie.edu.lk

முயல் ஓடியது.

வெள்ளை முயல் ஓடியது.

குழந்தை சிரித்தது.

அழகான குழந்தை சிரித்தது.

கண்ணன் ஓடினான்.

கண்ணன் வேகமாக ஓடினான்.

www.lkedu.lk

வாசிப்போம்

கிளி பறந்தது.

பூனை எலியைப் பிடித்தது.

நாய் குரைத்தது.

சிறுவன் ஓவியம் வரைந்தான்.

குதிரை ஓடியது.

கோழி முட்டை இட்டது.

குயில் பாடியது.

காகம் பழத்தைத் தின்றது.

பேருந்து வந்தது.

தேனீக்கள் ரீங்காரம் பாடின.

சேவல் கூவியது.

www.ikeuj.lk

பச்சைக் கிளி பறந்தது.

கறுப்புப் பூனை எலியைப் பிடித்தது.

வெள்ளை நாய் குரைத்தது.

சிறுவன் அழகிய ஓவியம் வரைந்தான்.

குதிரை வேகமாக ஓடியது.

பள்ளிக் கோழி முட்டை இட்டது.

குயில் இனிமையாகப் பாடியது.

காகம் கனிந்த பழத்தைத் தின்றது.

பேருந்து விரைவாக வந்தது.

அழகிய தேனீக்கள் ரீங்காரம் பாடின.

சேவல் இனிமையாகக் கூவியது.

அடைமொழி சேர்த்து எழுதுவோம்

1) பூத்திமா குடை வாங்கினாள்.

பூத்திமா பச்சைக் குடை வாங்கினாள்.

2) பாலன் சட்டை அணிந்தான்.

பாலன் சிவப்புச் சட்டை அணிந்தான்.

3) புறாக்கள் பறந்தன.

வெண்மை புறாக்கள் பறந்தன.

4) சங்கரன் தொப்பி அணிந்தான்.

சங்கரன் நீலத் தொப்பி அணிந்தான்.

5) கடையில் பேனா வாங்கினாள்.

கடையில் கறுப்புப் பேனா வாங்கினாள்.

6) வெளவால் மரக்கிளையில் தொங்கியது.

சிறிய வெளவால் மரக்கிளையில் தொங்கியது.

www.kalvikadal.lk

வாக்கியங்களிலுள்ள அடைமொழிச் சொற்களைத் தெரிவு செய்து கோடிடுக.

1) அழகான குழந்தை அங்கே இருந்தது.

2) சிறிய அணில் பழத்தைத் தின்றது.

3) காற்று பெரிய மரத்தை வீழ்த்தியது.

4) சிறுவன் அழகிய ஓவியம் வரைந்தான்.

5) சின்னக் குருவி சிறகை அசைக்கிறது.

6) பூனை பாலை நக்கிக் குடித்தது.

7) சேவல் இனிமையாகக் கூவியது.

www.ikeau.lk

தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுவோம்

1. ''மழையே மழை'' என்னும் பாடலை எழுதியவர் யார்?

_____

2. மலர்களை எது நனைக்கின்றது?

_____

3. மழை யாருக்கு இனியது?

_____

4. ஒத்தபொருள் எழுதுக.

பூ - _____ ஆழி - _____

www.lkedu.lk